# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 4-ஆம் நாள், வியாழக்கிழமை

**I.A. No. 3 of 2023 in O.S. No. 317 of 2018**
**(CNR No. TNSA-13000331-2018)**

1. R. நடராஜன்
2. R. சித்ரா .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

S. முருகேசன் .. எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 07.06.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ராமசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தங்களது தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், தாவா சொத்துக்கு சம்மந்தப்பட்ட வருவாய்த்துறை ஆவணங்களான அ பதிவேடு, புல வரைபடம் ஆகியவைகள் தங்களுக்கு தற்போது தான் கிடைக்கப் பெற்றது என்றும், வழக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணங்களில் கணினி பதிவு நகல்களை பெற்று அதில் சான்று கையொப்பம் போட்டு தற்போது தாக்கல் செய்திருப்பதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தனது தரப்பு வழக்கிற்கு அவசியமானது என்றும், எனவே ஆவணங்களை குறித்த காலத்தில் ஒப்படைக்காத காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

3. **<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** எதிர்மனுதாரர் / பிரதிவாதி தன்னுடைய எதிருரையில், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், அசல் வழக்கானது 2018-லேயே தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்காக பட்டியலிடப்படடு 1-ம் வாதியும் 20.09.2023 தேதியன்று விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுவிட்டதாகவும், வா.சா.1-ம் பிரதிவாதியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு போடப்பட்டுள்ள நிலையில் வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியமளிக்க வா.சா.1-ன் சாட்சியம் மறுதிரவு செய்வதற்காக மனு தாக்கல் செய்யப்படாமல் தாக்கல் செய்யப்பட்ட மனுவே நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் தாவா பாதை நிலவியல் பாதை என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அது பொதுப்பாதை என்றும் மனுதாரர்கள் / வாதிகள் கூறியிருப்பதாகவும், ஆவணங்களில் அவ்வாறு எவ்வித வகைபாடும் காணப்படவில்லை என்றும், எனவே தாவா சொத்துக்கும், ஆவணங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றும், மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கில் 1-ம் மனுதாரர் / 1-ம் வாதி 20.09.2023 தேதியன்று சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்து ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், தற்போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிற சமயத்தில் மனுதாரர்கள் / வாதிகள் தங்களது தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. அசல் வழக்கின் வழக்குரையை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை தாவா பாதையில் தங்களுக்கு உள்ள உரிமையை விளம்புகை செய்யவும், நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளனர் என்பதும், தாவா சொத்து விவரத்தில் புல எண் 332/7A-ல் தாவா பாதை செல்வதாக காட்டப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ பதிவேட்டில் தாவா புல எண் 332/7A-ஆனது நிலவியல் பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது அந்த ஆவணத்தை பரிசீலனை செய்ததில் தெரியவருகிறது. எனவே எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாவா சொத்துக்கும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்று கூறியுள்ள சங்கதி ஏற்கக்கூடியதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவில் மனுதாரர்கள் / வாதிகள் தாவா சொத்துக்கான அ பதிவேடு மற்றும் புல வரைபடத்தை வருவாய்த்துறையினரிடம் சான்றொப்பம் பெற்று தாக்கல் செய்வதில் தாமதமாகிவிட்டதாக கூறியுள்ளனர். எனவே மேற்படி காரணத்தை ஏற்றுக்கொண்டு மனுவில் குறிப்பிட்டுளள ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருதரப்பினருக்கும் அவரவர் வழக்கை நிரூபணம் செய்வதற்கு போதுமான ஆவணம் மற்றும் சாட்சியங்களை முன்வைக்க போதிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கு சொத்துக்கு சம்மந்தப்பட்டதா, இல்லையா என்பது குறித்து அவை குறியீடு செய்யப்படும்போது எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை எழுப்ப வாய்ப்பு உள்ளதாலும் அது குறித்து வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யவும் வாய்ப்பு உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர் / பிரதிவாதி

தரப்பு வழக்கிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. வா.சா.1-ன் குறுக்கு விசாரணைக்காக தற்போது அசல் வழக்கானது நிலுவையில் இருந்து வரும் சமயத்தில் கூடுதல் ஆவணங்களை வா.சா.1-ன் மூலம் குறியீடு செய்ய வா.சா.1-ன் முதல் விசாரணை சாட்சியத்தை மறுதிறவு செய்தால் மட்டுமே முடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மறுதிறவு செய்ய மனு தாக்கல் செய்யாத ஒரே காரணத்திற்காக இம்மனுவை தள்ளுபடி செய்ய இயலாது என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்ட பிறகு வா.சா.1-ன் முதல் விசாரணையை மறுதிறவு செய்ய மனுதாரர்கள் / வாதிகளுக்கு வாய்ப்பு வழங்க முடிவு செய்து இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

6. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 4-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் : இல்லை

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.

கூ.மா.உ.நீ., ஆத்தூர்.

**இ.ம.வ. எண் 3/2023**

---------------

**அ.வ. எண் 317/2018**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 04.07.2024